காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியம் வாக்குச்சாவடி பாக முகவர்கள் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சூர்யா வெற்றிகொண்டான் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றிய செயலாளர் கே.எம்.ஆர்.க.குமணன், இ.அசோகன், ஒன்றிய கழக நிர்வாகிகள் த.கன்னியப்பன், டி.எல்.தயாளன், ந.வீரராகவன், முனியம்மாள், ராஜகோபால், கோ.கமலக்கண்ணன், ஏ.கே.பரசுராமன் தொ.தட்சிணாமூர்த்தி, வே.திருநாவுக்கரசு, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் க.இளமது உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி சட்டமனற்த் தொகுதி, ஏ.என்.குப்பம் ஊராட்சியைச் சேர்ந்த 18 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் வீடு கட்டும் ஆணையை முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். உடன் கிளை செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

“அன்னம் தரும் அமுதகரம்” 86வது நாள்!

திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, மே 17- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 86 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (16.5.2025) திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 71 -ஈடன் கார்டன், பெரம்பூர். 2) வட்டம் 74- சேமாத்தம்மன் கோவில் 3 வது தெரு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் “தமிழ் நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மேயர் பிரியாராஜன், ப. தாயகம் கவி எம்.எல்.ஏ, செ. தமிழ் வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம் சரவணன், பி உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம். பெரோஸ்கான், கா. ராஜ்முகமது, பரிமளா சுரேஷ்பாபு, மா. ருத்ரமூர்த்தி,எஸ் புஷ்பராஜ், ஜி. கிருஷ்ணகுமார், எம். இசட். அபாய். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். திரு.வி.க.நகர் வடக்கு/தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா. ருத்ரமூர்த்தி, எம்.ஏ. டீக்கா, எம்.இசட்.அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.தமிம், பொல்லு டி.சுரேஷ்குமார், வி.க.வெங்கடேசன், எஸ். சசிகுமார், எஸ்.வெங்கடேசன் ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா, எம்.பி. பங்கேற்பு!

சென்னை தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை தெற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் இன்று (17.05.2025 - சனிக்கிழமை) நண்பகல் 12 மணி அளவில், சைதை எம்.சி.ராஜா விடுதி அருகில் உள்ள சாய் கிருஷ்ணா ஏ.சி. மினி ஹாலில் நடைபெறுகிறது. இக்கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமை தாங்குகிறார். இக்கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா, எம்.பி. கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்.

ஆகவே இக்கூட்டத்தில் தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி மற்றும் ஒன்றியக்கழகச் செயலாளர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: கழக ஆக்க பணிகள்

அமைச்சர் மா.சுப்பிரமணியன்,
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா, எம்.பி. பங்கேற்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், வருகிற (21.05.2025 - புதன்கிழமை) மாலை 4 மணியளவில் வாலாஜாபாத் - காஞ்சிபுரம் சாலையில் உள்ள அறம்வளர்த்த நாயகி திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் ச.இனியரசு, தலைமையிலும் மாவட்ட துணை செயலாளர்கள் டி.வி.கோகுலகண்ணன், க.செல்வம் எம்.பி., கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக மண்டலப் பொறுப்பாளர், கழக துணைப் பொது செயலாளர், ஆ.ராசா எம்.பி. கலந்து கொண்டு 2026 சட்டமன்றத் தேர்தல் பணி சம்மந்தமாக ஆலோசனை வழங்க உள்ளார். சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், சூர்யா வெற்றிகொண்டான் (உத்திரமேரூர்) அருண்குமார். (காஞ்சிபுரம்) எம்.டி.ஆர். சாரதி மணிமாறன், (மதுராந்தகம்) எஸ்.டி.இசை (செய்யூர்) ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

எனவே, இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - நகர - ஒன்றிய - பகுதி - பேரூர் செயலாளர்கள், மாநில, மாவட்ட, கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள், 2. கழக ஆக்கப்பணிகள்.

க.சுந்தர் எம்.எல்.ஏ.
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திருத்தணி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் சிறுகுமி கிராமத்தில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் என். கிருஷ்ணன், ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. கலந்து கொண்டு திராவிட மாடல் ஆட்சியின் நான்காண்டு சாதனை குறித்து விளக்கி பேசினார். உடன் தலைமை கழக பேச்சாளர் எஸ்.கே.ஸ்ரீராம், ஓ.ஏ.நாகலிங்கம், கே. ராஜேந்திரன், இ.கே.உதயசூரியன், அசுர் மாணிக்கம், டி. ராமதாஸ், வேலாயுதம், டில்லி பாபு, பன்னீர்செல்வம், கு.அன்பு, சிரஞ்சீவிலு, முரசொலி மூர்த்தி, மணி, கோவர்தன், சுந்தரம், வெங்கடேசன், குப்புசாமி, சீனிவாசன், பூபாலன், கமலநாதன்,ஹரிபாபு, கோவேந்தன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வார்டு–144, மதுரவாயல், பெருமாள் கோயில் தெருவில் ரூ.86.00 இலட்சத்து 7 ஆயிரம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியை மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி துவக்கி வைத்தார் உடன் மண்டல குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், எம்.இ.ஸ்டாலின் எம்.சி,ம.உதயகுமார், கே.ராஜ்குமார், பா. பக்தவச்சலம், எஸ்.அலெக்சாண்டர், கே.சம்பத், எஸ்.கஸ்தூரி, யோ.சாந்தராஜ் ,கு.தமிழரசன், எஸ்.தர்மலிங்கம், அ.ஞானசீலன், ம.விஜயகுமார், எஸ்அசோக்குமார் ஏ.மதிகுமார், க.மூவேந்தன், த.கோபி, சிவசங்கரன், கோவிந்தராஜ், நடராஜன், இளையராஜா பி.ஜெயபிரகாஷ், ம.சுதாகர், இ.ராஜா, த.ரஞ்சித்குமார், மலர்கொடி, கோரத்தினம், வினோத், இ.மோகன்தாஸ், டென்னிஸ், எஸ்.ஜெயசூரியா, எஸ்.விஜயகுமார், முகுந்தன், சங்கர், தினேஷ், அஞ்சலி, ஜெயபாலாஜி, எஸ்.ஆனந்த், ஜோசப், அருண், தினகரன் ஆகிய கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்!

பட்டூர் எஸ்.ஜபருல்லா தலைமையில்

மாங்காடு நகர தி.மு.க. சார்பில் 2 நாள் கிரிக்கெட் போட்டி!

டி.பெருமாள் ராஜ் ஏற்பாட்டில் கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, மே.17- மாங்காடு நகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இன்று (17.5.2025, நாளை 18.5.2025 ஆகிய 2 நாட்கள் கிரிக்கெட் போட்டி வசந்தபுரம் ஏ.ஆர்.கே. ஸ்போர்ட்ஸ் அக்காடமியில் நகர கழகச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா தலைமையில் நடைபெற உள்ளது.

மாங்காடு நகரமன்ற உறுப்பினர் டி.பெருமாள் ராஜ் நிகழ்ச்சி ஏற்பாட்டை செய்துள்ளார்.

பரிசுகளின் விவரம் வருமாறு:

முதல் பரிசு: ரூ.15000 + 6 அடி கோப்பை,

இரண்டாம் பரிசு: ரூ.13000 + 5 அடி கோப்பை,

மூன்றாம் பரிசு: ரூ.10000 + 4 அடி கோப்பை,

நான்காம் பரிசு: ரூ. 5000 + 3 அடி கோப்பை.

சிறந்த பந்து வீச்சாளர்: கோப்பை

சிறந்த ஆட்டக்காரர்: கோப்பை

தொடர் நாயகன்: கோப்பை

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் 10ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு!

86.10 சதவீத மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி!

சென்னை, மே 17- பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின்கீழ் 206 தொடக்கப்பள்ளிகள், 130 நடுநிலைப் பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 417 பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

2024-25ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 81 சென்னை பள்ளிகளில் பயிலும் 7,142 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதினார்கள். இதில் 3,113 மாணவர்கள் (83.93%) மற்றும் 3,036 மாணவியர் (88.44%) என மொத்தம் 6,149 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 86.10 ஆகும். இது சென்ற ஆண்டை விட 7 சதவீதம் கூடுதல் ஆகும்.

பாடவாரியான தேர்ச்சி விகிதத்தில் அறிவியல் பாடத்தில் 1 மாணவர், சமூக அறிவியல் பாடத்தில் 11 மாணவர்கள் என மொத்தம் 12 மாணவர்கள் 100/100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற பள்ளிகள்:

சைதாப்பேட்டை-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 500 மதிப்பெண்களுக்கு 492 மதிப்பெண்கள் பெற்று முதலிடத்தையும், புத்தா தெரு-சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி 500 மதிப்பெண்களுக்கு 491 மதிப்பெண்கள் பெற்று இரண்டாமிடத்தையும், சூளைமேடு-சென்னை மேல்நிலைப்பள்ளி 500 மதிப்பெண்களுக்கு 487 மதிப்பெண்கள் பெற்று மூன்றாமிடத்தையும், சைதாப்பேட்டை-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 500 மதிப்பெண்களுக்கு 486 மதிப்பெண்கள் பெற்று நான்காம் இடத்தையும், காமராஜ் அவென்யூ-சென்னை உயர்நிலைப்பள்ளி 500 மதிப்பெண்களுக்கு 486 மதிப்பெண்கள் பெற்று ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளன.

மதிப்பெண்கள் அடிப்படையில் 450 மதிப்பெண்களுக்கு மேல் 190 மாணவ, மாணவியர்களும், 400லிருந்து 449 வரை 653 மாணவ. மாணவியர்களும் பெற்றுள்ளனர்.

350 மதிப்பெண்களுக்கு மேல் 1963 மாணவர்கள் பெற்றுள்ளனர்.

100 சதவீத தேர்ச்சி - புரசை, ஜி. கோயில் தெரு-சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம்-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, காமராஜபுரம்-சென்னை உயர்நிலைப் பள்ளி, கொடுங்கையூர், காமராஜர் சாலை-சென்னை உயர்நிலைப்பள்ளி, கண்ணம்மாபேட்டை-சென்னை உயர்நிலைப்பள்ளி, பாடிக்குப்பம்-சென்னை உயர்நிலைப்பள்ளி, லாய்ட்ஸ் சாலை-சென்னை மேல்நிலைப்பள்ளி, குக்ஸ் சாலை-சென்னை உயர்நிலைப்பள்ளி, கீழ்ப்பாக்கம்- சென்னை உயர்நிலைப்பள்ளி, கே.பி. தெரு-சென்னை உயர்நிலைப்பள்ளி, சேத்துப்பட்டு, மெக்நிக்கோலஸ் சாலை-சென்னை உயர்நிலைப் பள்ளி, ரங்கராஜபுரம்-சென்னை உயர்நிலைப் பள்ளி, வி.பி.கோயில் தெரு-சென்னை உயர்நிலைப்பள்ளி, சூளைமேடு-சென்னை மேல் நிலைப்பள்ளி என மொத்தம் 14 சென்னை பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளது.

சென்னை அதிராமபட்டினத்தில், கழகத்தின் நான்கு ஆண்டுகால ஆட்சியின் சாதனைகளை விளக்கும் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு எஸ்.ஹெச் அஸ்லாம் தலைமை தாங்கினார். பழஞ்சூர் செல்வம், கார்த்திகேயன், வேலுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். தெருமுனைக் கூட்டத்தில் தி.மு.க. வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் சிறப்புரையாற்றினார். கழக நிர்வாகிகள் இதில் பங்கேற்றனர்.

குற்றாலம் பேரூர்க் கழக முன்னாள் பொருளாளர்

மேலப்பாவூர் பேச்சிமுத்து மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே. 17-

குற்றாலம் பேரூக் கழக முன்னாள் பொருளாளர் மற்றும் ஒன்றிய பிரதிநிதி மேலப்பாவூர் பேச்சிமுத்து அவர்கள் நேற்று (16.5.2025 - வெள்ளி) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த பேச்சிமுத்து அவர்கள் கழகத்தின் மீதும், முத்தமிழறிஞர் கலைஞர், தலைவர் தளபதி ஆகியோர் மீதும் தீராத பற்றுக்கொண்டவர்.

மறைவு செய்தி அறிந்த தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி.எம்.இராமசாமி

மே 17 (1999)

இளம் வயதிலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.

வடபெரும்பாக்கம் கிளைச் செயலாளராக மூன்று முறையும் – மாதவரம் ஒன்றிய துணைச் செயலாளராக இரண்டு முறையும் – மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர். குறிப்பாக, மிசா சட்டத்தை கண்டித்து, கறுப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.